2022 மார்ச் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கையான உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்த வேண்டும் என்பது அவர் மட்டுமல்ல, பல சட்டமன்ற உறுப்பினர்களும் கேட்கின்ற ஒன்றுதான். அதற்காக நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேகூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு பேராசிரியர் அன்பழகனார் அவர்களின் பெயரில் மேம்பாட்டு வளர்ச்சி நிதியின்கீழ் 18,000 வகுப்பறைகளுக்கு 7,000 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் கோரிக்கை கொடுத்திருக்கின்றீர்கள். கண்டிப்பாக, இந்த 5 வருட காலத்தில் படிப்படியாக அவை அனைத்தும் நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். சரவணக்குமார் அவர்கள்.*

திரு. கே.எஸ். சரவணக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள். மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

விளையாட்டு மைதானம்

***15212—திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2022 மார்ச் 23

திரு.வி.க. நகர் தொகுதி, 71-வது வார்டு, ஜமாலியா பள்ளியின் அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, சென்னை மாநகராட்சி வார்டு எண் 71, ஜமாலியா பள்ளியின் அருகில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், கழகத்தினுடைய இளைஞரணிச் செயலாளர், அன்புச் சகோதரர் திருமிகு உதயநிதி அவர்களுக்கும் என் வணக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு.வி.க. நகர் தொகுதியில் பழைய வார்டு எண் 71, புதிய வார்டு எண் 74-ல் ஜமாலியா என்ற பகுதி இருக்கின்றது. அந்த ஜமாலியா பகுதியில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் ஒன்று உள்ளது. அந்த ஜமாலியா பகுதியில் வசிக்கின்ற இளைஞர்கள் மற்றும் அந்த ஜமாலியா பகுதியை ஒட்டியுள்ள கிருஷ்ணதாஸ் சாலை, ஆதிசேசன் நகர், ஈடன் கார்டன், ஐதர் கார்டன், சந்திரயோகி சமாதி சாலை, சேமத்தம்மன் காலனி, ஏகாங்கிபுரம், மங்களபுரம், சாஸ்திரி நகர், நேரு ஜோதி நகர், பிரிஸ்லி நகர், வாழைமா நகர் என்று. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் ஞாபக சக்தி குறித்து எனக்குத் தெரியும். அரை மணி நேரம் என்றாலும் மனதில் உள்ளதை அப்படியே மனப்பாடமாகப் பேசுவீர்கள். கேள்விக்கு வாருங்கள்.*

2022 மார்ச் 23]

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே வசித்து வருகின்ற இளைஞர்கள் கிட்டத்தட்ட 25 ஆண்டு காலத்திற்கும் மேலாக AFC என்ற பெயரில் அமைப்பு ஒன்றை உருவாக்கி அந்தத் திடலிலே பல்வேறு கால்பந்தாட்டப் போட்டிகளை நடத்தி பயன்பெற்று வந்தனர். கடந்த கால ஆட்சியில் திடீரென்று ஒரு நாள், அந்த இடம் மாநகராட்சியினுடைய பழுதடைந்த வாகனங்களையும், மாநகராட்சி வாகனங்களுடைய பொருட்களையும் சேகரித்து வைக்கும் இடமாக மாற்றப்பட்டது. உடனே நாங்கள் தொடர்புடைய அதிகாரிகளிடம் முறையிட்டு, அந்த இடத்தைச் சுத்தம் செய்து இளைஞர்கள் பயன்பெறுகின்ற வண்ணம் மாற்றித் தர வேண்டும் என்று கேட்டபோது, அவர்களும் 'விரைந்து செய்வதாக' வாக்குறுதி அளித்தார்கள். ஆனால், அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. அதனைத் தொடர்ந்து திடீரென்று ஒரு நாள் அந்த இடம் சுத்தம் செய்யப்பட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தாயகம் கவி உங்களுக்கு மீண்டும் ஒரு முறை சொல்கிறேன், கேள்விக்கு வந்துவிடுங்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடம் 1 முதல் 8 வரையிலான மண்டலங்களில் சேகரிக்கப்படுகின்ற கட்டடக் கழிவுகளை தரம் பிரிக்கும் மையமாக மாற்றப்பட்டது. அந்தப் பகுதியிலே விளையாட்டுத் திடலில் பயிற்சி பெற்ற பல பேர் சர்வதேச அளவிலும், இந்திய அளவிலும், மாநில அளவிலும் நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டியில் பங்குபெற்று தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி இன்றையதினம் ரிசர்வ் வங்கியிலும், இந்தியன் வங்கியிலும், இரயில்வே துறையிலும், வருமான வரித் துறையிலும் வேலை பெற்று பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய இளைஞர்கள் இன்றையதினம் அங்கு விளையாட்டுத் திடல் இல்லாத காரணத்தினால், அவர்களுடைய எண்ணங்கள் பல்வேறு வகைகளில் சென்று கொண்டிருக்கின்றன. எனவே, கேள்விக்குறியாக இருக்கின்ற அவர்களுடைய வாழ்க்கை நிலையை மாற்றியமைக்க அந்தப் பழைய கட்டடப் பொருட்களைச் சேகரிக்கும் மையத்தை அந்த இளைஞர்கள் பயன்பெறுகின்ற வண்ணம், விளையாட்டுத் திடலாக மாற்றித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத்

துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். நீங்களும் அவ்வளவு நீளமாக பதில் சொல்ல வேண்டாம்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக விளையாட்டுத் துறையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பல்வேறு சரித்திர சாதனைகளைப் படைத்து வருகிறார்கள். அந்த வகையில் யாருமே எதிர்பார்க்காத வகையில், 44–வது Chess Olympiad, 2022 ஆம் ஆண்டுக்கான உலக சதுரங்கப் போட்டியைத் தமிழகத்தில் நடத்துவதற்கான அனுமதியைப் பெற்றுத் தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது தமிழக விளையாட்டுத் துறையில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய சரித்திர சாதனையாகும். காரணம், உலகில் இருக்கின்ற 200–க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 2,000–க்கும் மேற்பட்ட சதுரங்க விளையாட்டு வீரர்கள் பங்கேற்கின்ற இந்த நிகழ்வால் தமிழ்நாடு மட்டுமல்ல, இந்தியாவே பெருமைகொள்கிறது. அந்த வகையில், சென்னையைப் பொறுத்தவரைக்கும் உலகத் தரத்திலான 5 விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன. ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம், நேரு உள் விளையாட்டு அரங்கம், Mayor Radhakrishnan Hockey Stadium, வேளச்சேரி நீச்சல் குளம், அதுபோல் Nungambakkam Tennis Stadium என சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, சென்னை மாநகராட்சி ward எண் 71–க்குட்பட்ட ஜமாலியா பள்ளியின் அருகிலுள்ள விளையாட்டு மைதானம் அமைந்துள்ள இடத்திற்கு நம்முடைய துறை அதிகாரிகளை அனுப்பி நேரடியாக ஆய்வுகளை மேற்கொண்டோம். அந்த இடத்தில் கடந்த காலத்தில் கால்பந்தாட்டத்தை அதிகமாக விளையாடியிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் இருக்கின்ற கட்டடக் கழிவுகளை அகற்றி,

2022 மார்ச் 23]

மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கு ஒப்படைக்கும்பட்சத்தில் கால்பந்தாட்ட மைதானம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதற்குப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள், ஒரு வரியில் ஒரு கேள்வி கேளுங்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே தலைசிறந்த ஆட்சியை நடத்தி வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் நோக்கத்தோடு, பல்வேறு சாதனைகளைச் செய்து வருகிறார் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. சமீபத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நிகழ்விலே உரையாற்றுகின்றபொழுது . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தாயகம் கவி, உரையை முடியுங்கள். கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: *வாழ்க்கையை விளையாட்டாக எடுத்துக்கொள்பவர்களும் இருக்கிறார்கள். அரசியலையும் விளையாட்டாக எடுத்துக்கொள்பவர்களும் இருக்கிறார்கள். ஆனாலும், நாங்கள் விளையாட்டைக்கூட விளையாட்டாக எடுத்துக்கொள்ளாமல், விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் நோக்கத்தோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றார். அவருடைய சீரிய சிந்தனையோடு, இப்பேரவைக்கு உவந்தளிக்கப்பட்ட* budget-*ல்கூட, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், வட சென்னையில் இருக்கின்ற இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வண்ணம் சிறந்த கட்டமைப்புடன்கூடிய விளையாட்டுத் திடல் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். மாண்புமிகு அமைச்சர்*

அவர்களிடமிருந்து உங்களுக்கு என்ன பதில் வேண்டும் என்பதற்கு உங்களிடம் என்ன கேள்வியிருக்கிறது? அதை மட்டும் கேளுங்கள். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: அங்கு விளையாட்டுத் திடலை அமைப்பதற்குப் பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

50—

தொழிற்பயிற்சி நிலையம்

***8441—திரு. N. அசோக்குமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பகுதியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் 3 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் அமைந்துள்ளன. இம்மாவட்டத்திலுள்ள 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 4,044 இடங்களில் 1,056 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டு, இன்னும் 2,988 இடங்கள் காலியாக உள்ளன. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள 50 சதவிகித அரசு ஒதுக்கீட்டு இடங்களில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கான முழு கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொண்டும்கூட,